மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.04/2019
அ.வ.எண்.03/2019

1. அங்கப்பன்
2. அருள்மொழி
3. தேன்மொழி
4. கார்த்திகேயன்
5. இளையராஜா
6. ஜோதி
7. ஆறுமுகம் ...மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள்

/எதிராக/

1. குமார்
2. பிரீத்தா ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

3. தங்கராஜ் ...எதிர்மனுதாரர்/1 ம்பிரதிவாதி

இம்மனு கடந்த 02.09.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.சிவராம் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 3 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.அழகேசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1,2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களது ஆட்களோ, முகவர்களோ மனுசொத்தில் சட்டத்திற்கு புறம்பான முறையில் எந்தவொரு மாற்றங்களையும், கட்டிடப்பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது எனவும், எவ்வித இடையூறுகளும், தொந்தரவும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

தாவா ஏ பட்டியல் சொத்துகள் மனுதாரர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்துகளாகும். 1ம்பிரதிவாதியும், எதிர்மனுதாரர்களும் கூட்டுசேர்ந்து மோசடியாக கிரய ஆவணங்களை ஏற்படுத்தியது போலவே இவ்வழக்கையும் தாக்கல் செய்துள்ளனர். எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களின் அனுமதியின்றி தாவா ஏ பட்டியல் சொத்தினை கிரயம் செய்துள்ளது மோசடியான செயலாகும். எனவே மனுதாரர்கள் மற்ற பங்காளிகளுடன் சேர்ந்து 1 மற்றும் 3 ம்எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.182/2018 என்ற வழக்கு பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது. எதிர்மனுதாரர்களின் சுவாதீனத்தை மனுதாரர்கள் இடையூறு செய்யக்கூடாது என கூறிக்கொண்டு எதிர்மனுதாரர்கள் காவல்துறை உதவியுடன் மனுசொத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்து வருகின்றனர். அவ்வாறு எதிர்மனுதாரர்கள் கட்டிடம் கட்டினால் மனுசொத்தில் மனுதாரர்களுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படும். மேலும் இவ்வழக்கில் ஓர் இறுதியான முடிவை எட்ட இயலாது. எனவே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) தாவா அ அட்டவணை சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பாகம் பிரிக்கப்படாத கூட்டுக் குடும்ப சொத்துகள் என கூறியுள்ளது பொய்யாகும். 1ம்பிரதிவாதியும், எதிர்மனுதாரர்களும் வஞ்சக கூட்டு வைத்து கொண்டு மோசடியான முறையில் தாவா சொத்துகளை குறித்து மோசடியான முறையில் கிரய ஆவணங்களை ஏற்படுத்தியது போல இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என கூறியுள்ளது பொய்யாகும்.

(ii) மனுதாரர்களுக்கு தாவாசொத்தில் உரிமை ஏதும் இல்லை. ஏனெனில் 01.06.1954 ல் கைலாசமூப்பன் மற்றும் அருணாசல மூப்பன் ஆகியோர் ச.எண்.435/1ல்

சுமார் 2 ஏக்கர் 16 செண்ட் நிலங்களை கிரையம் பெற்றது பெயரளவிலான ஒன்றாகும். அதன்படி மாரிமூப்பன், பெரியண்ண மூப்பன், கைலாச மூப்பன், அருணாசல மூப்பன் ஆகியோர் கடந்த 50 வருடங்களுக்கு முன்பாக வாய்மொழி பாகம் செய்து கொண்டு அதன் படி அவரவர்கள் தனித்தனியாக சுவாதீனத்தில் இருந்து வந்தனர். அதன் அடிப்படையில் இவ்வழக்கில் 1ம்பிரதிவாதி 20 வருடங்களுக்கு முன்பு பாகமாக வந்த நிலங்களை அனுபவித்து வந்து பின்பு அவரது மனைவி சுமதிக்கு 09.04.2009 ல் சுமார் 3565 சதுரடி நிலத்தை தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி கொடுத்தார். கடந்த 25.11.2009 ல் சுமதியின் அனுபவத்தில் இருந்த 1800 சதுரடி நிலத்தை சரவணனுக்கும், 1500 சதுரடி நிலத்தை அசோகனுக்கும், மீதியுள்ள 240 சதுரடி நிலத்தை ராஜேந்திரனுக்கும் விற்பனை செய்தார். மேற்படி சரவணன் அவரது மனைவி சந்திராவுக்கு 09.06.2011 ல் விற்பனை செய்தார். மேற்படி சந்திராவிடமிருந்து 23.10.2014 ல் 1ம்எதிர்மனுதாரர் 1805 சதுரடி நிலத்தையும், 2015 ல் அசோகனிடமிருந்து 1520 சதுரடி நிலத்தையும் சமன் செய்து 1ம்எதிர்மனுதாரர் அனுபவித்து வந்தார்.

(iii) சந்திரா மற்றும் அசோகன் ஆகியோரிடமிருந்து 1ம்எதிர்மனுதாரர் கிரயம் பெற்ற சொத்துகளை 2015ம் ஆண்டு அதிலுள்ள கற்களை அகற்றி சமன்படுத்தி அனுபவித்து வந்தார். அப்போது மனுதாரர்களோ, அவர்களது குடும்பத்தார்களோ ஆட்சேபிக்கவில்லை. இந்நிலையில் 2018 ல் 1ம்எதிர்மனுதாரர் மேற்படி இரண்டு பகுதிகளையும் ஒன்றாக சேர்த்து கட்டிடம் கட்டுவதற்காக கட்டுமானப் பணிகளை செய்து வந்த விவரங்களும் மனுதாரர்களுக்கு தெரியும். 1ம்எதிர்மனுதாரரின் நிலத்தை குறைந்த விலைக்கு மனுதாரர்கள் கேட்டனர். அதனை 1ம்எதிர்மனுதாரர் மறுத்தார். எனவே அ.வ.எண்.182/2018 என்ற வழக்கை மனுதாரர்கள் தாக்கல் செய்தனர். மனுதாரர்களும், அவர்களது ஆட்களும் தான் எதிர்மனுதாரர்களை வண்டிப்பாதையில் விவசாய நிலத்திற்கு செல்லவிடாமலும், கட்டுமான பணிகளை செய்யவிடாமலும் தடுத்தனர். எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1,2 ம்எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) 3 ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மல்லிகுந்தம் கிராமத்தில் ச.எண்.435/1 ல் உள்ள 2.14 ஏக்கர் நிலம் கொளந்தை மூப்பன் மற்றும் அவருடைய மனைவி காவேரியம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். அவர்களின் வாரிசுகள் மாரிமூப்பன், பெரியண்ண மூப்பன், கைலாச மூப்பன், அருணாசல மூப்பன் ஆவர். கடந்த 30.01.1939 ல் கொளந்தைமூப்பன் மற்றும் அவரது மனைவியும் கூட்டுறவு சங்கத்தில் மேற்படி சொத்துகளை அடமானம் வைத்தனர். மேற்படி சொத்தை 24.04.1941 ல் முத்து கொமரமூப்பன் என்பவர் பழனியம்மாள் என்பவருக்கு கடனுக்கு அடமானம் வைத்தார். மேற்படி சொத்தை 01.05.1941 ல் பழனிமூப்பன், முத்து கொமரமூப்பனுக்கு விற்பனை செய்துள்ளார். மேற்படி சொத்தில் 2 ஏக்கரை 03.06.1943 ல் முத்துகொமரமூப்பன், செங்கோட மூப்பனுக்கு விற்பனை செய்தார். விற்பனை செய்த 2 ஏக்கரை செங்கோடமூப்பன், வையாபுரிமூப்பனுக்கு 04.12.1943 ல் கடனுக்காக அடமானம் வைத்தார். அதன்பின் மேற்படி 2 ஏக்கர் நிலத்தை செங்கோட மூப்பன், பெருமாள்கவுண்டருக்கு விற்பனை செய்து 23.08.1944 ல் மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்.

(ii) இந்நிலையில் மேற்படி சொத்தை மீட்க வேண்டி காவேரியம்மாள், கைலாசமூப்பன், அருணாசலமூப்பன், பெரியண்ண மூப்பன், மாரிமூப்பன் ஆகியோர்கள் பெயரளவில் 18.06.1946 ல் பெருமாள் கவுண்டருக்கு மேற்படி சொத்தை விற்பனை செய்தனர். மேற்படி சொத்தில் பெருமாள்கவுண்டருக்கு சின்னண்ணன் வகையறாக்கள் விற்பனை செய்து 15.07.1947 ல் பதிவு செய்தனர். காவேரியம்மாள், கைலாசமூப்பன், அருணாசலமூப்பன், பெரியண்ண மூப்பன், மாரிமூப்பன் ஆகியோர்கள் பெருமாள் கவுண்டர் பெயரில் கிரையம் செய்த தாவாசொத்துகளை மீண்டும் கைலாசமூப்பன், அருணாசலமூப்பன் ஆகியோர்கள் பெயரில் 01.06.1954 ல் கிரையம் செய்தனர். கைலாசமூப்பன், அருணாசலமூப்பன் ஆகியோர்கள் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட சொத்துகள் அல்ல. அது கூட்டு குடும்ப சொத்துகளாகும். இந்த சொத்துகளை 50 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி 4 பேரும் வாய்வழி பாக மூலம் பிரித்து கொண்டு தனித்தனியாக அனுபவித்து வந்தனர். மேற்படி கைலாசமூப்பனுக்கு வாய்வழி பாக மூலம் பிரிந்த பாகத்தில் 20 வருடங்களுக்கு முன்பு 3 ம்எதிர்மனுதாரரும், கைலாச

மூப்பனின் மற்ற வாரிசுகளும் வாய்வழி பாகமூலம் பிரித்துகொண்டு தனித்தனியாக அனுபவித்து வந்தனர். அதன் அடிப்படையில் 3ம்எதிர்மனுதாரருக்கு வாய்வழி பாகமூலம் ஒதுக்கப்பட்ட சொத்துகளை விற்பனை செய்ததை மனுதாரர்கள் மறைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி குடும்ப நபரான ஆறுமுகத்திற்கு பிரிந்த பாகத்தில் 01.07.2011ல் அவரது மனைவி பெயரிலும், அதேபோல் சுந்தரத்திற்கு பிரிந்த பாகத்தில் 27.07.1999ல் அவரது மனைவி பெயரிலும் செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்துள்ளனர். இந்த உண்மையையும் மறைத்து மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் துய கரங்களுடன் இம்மனுவை தாக்கல் செய்யவில்லை. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 3ம்எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.24 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>6) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) இருதரப்பிலும் இ.ம.எண்.02/2019ல் தாக்கல் செய்த ஆவணங்களை இம்மனுவிற்கான ஆவணங்களாக எடுத்துக் கொள்ள வேண்டுமென குறிப்பாணைகள் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் மேற்படி இ.ம.எண்.02/2019ல் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இம்மனுவிற்கான ஆவணங்களாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் இம்மனுவில் 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் ம.சா.ஆ.1 முதல் 24 வரையிலான சான்றாவணங்களாகும். மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் எ.ம.சா.ஆ.1 முதல் 14 வரையிலான சான்றாவணங்களாகும்.

(ii) மனுதாரர்கள் தரப்பில் தாவா ஏ பட்டியல் சொத்துகள் மனுதாரர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்துகள் எனவும், 1ம்பிரதிவாதியும், எதிர்மனுதாரர்களும் கூட்டுசேர்ந்து மோசடியாக கிரய ஆவணங்களை ஏற்படுத்தியது போலவே இவ்வழக்கையும் தாக்கல் செய்துள்ளனர் எனவும், எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களின் அனுமதியின்றி தாவா ஏ பட்டியல் சொத்தினை கிரயம் செய்துள்ளது மோசடியான செயல் எனவும், எனவே மனுதாரர்கள் மற்ற பங்காளிகளுடன் சேர்ந்து 1 மற்றும் 3ம்எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.182/2018 என்ற வழக்கு பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது எனவும், எதிர்மனுதாரர்களின் சுவாதீனத்தை மனுதாரர்கள் இடையூறு செய்யக்கூடாது என கூறிக்கொண்டு எதிர்மனுதாரர்கள் காவல்துறை உதவியுடன் மனுசொத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்து வருகின்றனர் எனவும், அவ்வாறு எதிர்மனுதாரர்கள் கட்டிடம் கட்டினால் மனுசொத்தில் மனுதாரர்களுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படும் எனவும், மேலும் இவ்வழக்கில் ஓர் இறுதியான முடிவை எட்ட இயலாது எனவும், எனவே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) தாவா ஏ மற்றும் இதர சொத்துகளும் கடந்த 01.06.1954ம் தேதியிட்ட எ.ம.சா.ஆ.1 ன் மூலம் கைலாசமூப்பன் மற்றும் அவருடைய சகோதரர் அருணாசல மூப்பன் ஆகியோரால் கிரையம் பெற்ற நிலங்கள் எனவும், அவர்கள் மேற்படி நிலங்களை 50 வருடங்களுக்கு முன்பு பாகம் பிரித்துக் கொண்டு அனுபவித்து வந்தனர் எனவும், கைலாச மூப்பனின் வாரிசுகளான அங்கப்பன், கொழந்தைவேல், சுந்தரம், தங்கராஜ், ஆறுமுகம் மற்றும் அலமேலு ஆகியோர் கைலாசமூப்பனின் சொத்துகளை பல ஆண்டுகளுக்கு முன்பு பாகம் பிரித்து அவரவர் பாகங்களை அனுபவித்து வந்தனர் எனவும், 1ம்பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் 1ம்பிரதிவாதிக்கு பிரிந்த சொத்துகளை தன்னுடைய மனைவியான சுமதிக்கு 09.04.2009ல் ம.சா.ஆ.1ன் மூலம் ச.எண்.435/1ல் 3565 சதுரடி நிலத்தை தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி கொடுத்தார் எனவும், ஏ அட்டவணையில்

சுமதியின் அனுபவத்தில் இருந்த 1805 சதுரடி நிலத்தை சரவணனுக்கும், 1520 சதுரடி நிலத்தை அசோகனுக்கும் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ன் மூலம் மீதியுள்ள 240 சதுரடி நிலத்தை ராஜேந்திரனுக்கும் தகுந்த மறுபயனுக்கு விற்பனை செய்ததாகவும் கூறியுள்ளனர்.

(iv) மேலும் சரவணன் கிரயம்பெற்ற சொத்தினை தன்னுடைய மனைவி சந்திராவுக்கு ம.சா.ஆ.4 ன் மூலம் 09.06.2011 ல் விற்பனை செய்தார் எனவும், மனு சொத்துகளான ஏ அட்டவணை சொத்திலுள்ள 1 வது அயிட்டசொத்தை சந்திராவிடமிருந்து 23.10.2014 ல் 1 ம்எதிர்மனுதாரர் ம.சா.ஆ.5 ன் மூலம் கிரையம் பெற்றார் எனவும், 2 வது அயிட்ட சொத்தை அசோகனிடமிருந்து 1 ம் எதிர்மனுதாரர் 18.06.2018 ல் ம.சா.ஆ.7 ன் மூலம் கிரையம் பெற்றுள்ளார் எனவும், ம.சா.ஆ.10, 11 கணிணி சிட்டாக்கள் பெற்று அனுபவித்து வந்ததாகவும், ஆகவே கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக கூறுவது பொய் எனவும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1,2 எதிர்மனுதாரர்களால் கட்சி செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என 7 ம் மனுதாரரும், சுந்தரமும் ஒப்புக் கொண்டுள்ளார்கள் எனவும், ஆகவே கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக கூறுவது பொய் எனவும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

(v) இருதரப்பு வழக்குகளையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்ததில் வழக்கு அ அட்டவணை சொத்து கைலாசமூப்பன் மற்றும் அருணாசலமூப்பன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்பதை இருதரப்பிலும் ஒப்புக் கொண்டுள்ளனர். அதனை எ.ம.சா.ஆ.1, 9 மற்றும் 11 ஆகியவை உறுதி செய்கின்றது.

(vi) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி கைலாசமூப்பன் மற்றும் அருணாசல மூப்பன் ஆகியோரிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது எனவும், மேற்படி கைலாச மூப்பனின் வாரிசுகள் அவர்களுக்குள்ளே பாகம் பிரித்துக்கொண்டனர் என கட்சி செய்துள்ளனர்.

(vii) எதிர்மனுதாரர்கள் கூறுவது போல் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்ததில் வழக்கு சர்வே எண்ணான 435/1பி குறித்து 7ம்மனுதாரரான ஆறுமுகம் கடந்த 01.07.2011ல் தன்னுடைய மனைவி மதியழகிக்கு ம.சா.ஆ.21ன் மூலம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். அந்த ஆவணத்தின் 2வது பக்கத்தில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு, அதன் அடிப்படையில் அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். அதேபோல் 3ம்எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தன்னுடைய மனைவியான சுமதிக்கு வழக்கு சர்வே எண்ணான 435/1 குறித்து கடந்த 09.04.2009ல் ம.சா.ஆ.1ன் மூலம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதும், அதில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. 1ம்பிரதிவாதியும், அவருடைய சகோதரரின் மகனுமான 7ம்மனுதாரர் எழுதிக் கொடுத்துள்ள ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.21ல் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது.

(viii) ம.சா.ஆ.21யை எழுதிக் கொடுத்துள்ள ஆறுமுகம் இம்மனுவில் 7ம்மனுதாரராக உள்ளார். அவருக்காகவும் சேர்த்து தான் 4ம்மனுதாரர் பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்து அதனை மற்ற மனுதாரர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்நிலையில் மேற்படி ஆவணத்தின் பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என கூறிவிட்டு, தற்போது பாகப்பிரிவினை ஏற்படவில்லை என 7ம்மனுதாரர் உட்பட மற்ற மனுதாரர்கள் முன்னிலைப்படுத்திய கட்சி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 115ன் கீழ் தடைசெய்யப்பட்டதாகும். எனவே பாகப்பிரிவினை ஏற்படவில்லை எனவும், மனுதாரர்கள் கூட்டுரிமையாளர்கள் எனவும் முன்வைத்த கட்சி இம்மனுவை பொறுத்தவரை ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(ix) மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் 3ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி ச.எண்.435/1ல் 3565 சதுரடியை அவரது மனைவி சுமதிக்கும், சுமதி அதன் ஒரு பகுதியான 1805சதுரடியை சரவணனுக்கும், 1520சதுரடியை அசோகனுக்கும் விற்பனை செய்துள்ளது ம.சா.ஆ.2 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சரவணன் தன்னுடைய மனைவிக்கு ம.சா.ஆ.4ன் மூலமும், மேற்படி சரவணனின்

மனைவி சந்திரா 1ம்எதிர்மனுதாரருக்கு மனு ஏ அட்டவணை சொத்தின் முதல் அயிட்ட சொத்தை குறித்து ம.சா.ஆ.5 எழுதிக் கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதும், ம.சா.ஆ.7ன் மூலம் மனு 2ம் அயிட்ட சொத்தினை அசோகன், 1ம்எதிர்மனுதாரர் பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ளதையும் அறியமுடிகிறது. மேலும் மேற்படி கிரய பத்திரங்களின் அடிப்படையில் 1ம்எதிர்மனுதாரர் பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டு கணிணிபட்டா வழங்கப்பட்டுள்ளதை ம.சா.ஆ.10 மற்றும் 11ன் மூலம் அறியமுடிகிறது.

(x) இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி கிரய பத்திரங்கள் செல்லாது என அ.வ.எண்.182/2018 தாக்கல் செய்த போதும், அவ்வழக்கில் மேற்படி ஆவணங்கள் செல்லாது எனவும், மோசடியானது எனவும் தீர்மானிக்கின்ற வரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் 3ம்எதிர்மனுதாரரின் மனைவி சுமதிக்கோ, அதன் பின்னர் அவரிடமிருந்து கிரயம் பெற்றவருக்கோ, 1ம்எதிர்மனுதாரருக்கோ உரிமை ஏற்படாது என கூற முடியாது. மேலும் வருவாய்துறை ஆவணங்களான ம.சா.ஆ.10, 11 ஆகியவை 1ம்எதிர்மனுதாரர் பெயரில் உள்ள நிலையில் மனுதாரர்கள் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என கூறுவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகவே மனுதாரர்கள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை எனவும், மனுதாரர்கள் கூட்டுரிமையாளர்கள் எனவும், வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி பத்திரங்கள் செல்லாது என முன்வைத்த அனைத்து கட்சிகளும் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் மனுதாரர்கள் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக கூறினாலும் அதற்காக தாக்கல் செய்யப்பட்ட வருவாய்துறை ஆவணங்களில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக காணப்படவில்லை. மேலும் 7ம்மனுதாரர் பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என கூறி ம.சா.ஆ.21 எழுதிக் கொடுத்ததற்கு பின்னிட்டு அதனை மறைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள் துாய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை எனவும், மனுதாரர்கள் வழக்கில் முகநோக்கு வழக்கு இல்லை எனவும், இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(xi) இம்மனுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளவைகள் அனைத்தும் இம்மனுவை பொறுத்த முடிவுகள் தான். இவைகள் இந்த வழக்கின் விசாரணைக்கும் மற்றும் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் அ.வ.எண்.182/2018 ன் விசாரணைக்கும் பொருந்தாது.

முடிவாக மனு தள்ளுபடி செய்யப்பட்டும், அவரவர் செலவுத்தொகைககளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 09.04.2009 1 ம்பிரதிவாதி, தங்கராஜி அவரது மனைவி சுமதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.2 | 25.11.2009 சுமதி, சரவணனுக்கு எழுதிக் கொடுத்த விற்கிரயப்பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.3 | 25.11.2009 சுமதி, அசோகனுக்கு எழுதிக் கொடுத்த விற்கிரயப்பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.4 | 09.06.2011 சரவணன், அவரது மனைவி சந்திராவுக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.5 | 23.10.2014 சரவணனின் மனைவி சந்திரா, 1 ம்மனுதாரர் குமாருக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.6 | 26.06.2015 பாப்பா மற்றும் ராஜேந்திரன் வகையறாக்கள், 2 ம் மனுதாரர் பிரீத்தாவுக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் | அசல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.7 | 18.06.2018 அசோகன், 1ம்மனுதாரர் குமாருக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.8 | 18.06.2018, 19.09.2016 பட்டா மாறுதல் உத்தரவு | நகல் |
| ம.சா.ஆ.9 | அ.வ.எண்.182/2018 ன் வழக்குரை | அலுவலகநகல் |
| ம.சா.ஆ.10 | 03.09.2018 கணிணி பட்டாஎண்.3451 | கணிணிநகல் |
| ம.சா.ஆ.11 | 01.09.2018 கணிணி பட்டாஎண்.3556 | கணிணிநகல் |
| ம.சா.ஆ.12 | 31.12.2018 கணிணி பட்டாஎண்.3453 | கணிணிநகல் |
| ம.சா.ஆ.13 | அடங்கல் | உண்மைநகல் |
| ம.சா.ஆ.14 | 31.12.2018 அ பதிவேடு | கணிணிநகல் |
| ம.சா.ஆ.15 | 31.12.2018 புல வரைபடம் | கணிணிநகல் |
| ம.சா.ஆ.16 | 03.01.2019 மாதிரி வரைபடம் | அசல் |
| ம.சா.ஆ.17 | 24.04.2019 1ம்எதிர்மனுதாரர், காவல்துறை துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு மற்றும் | நகல் |
| | அஞ்சலக ரசீது | அசல் |
| ம.சா.ஆ.18 | புகைப்படங்கள்(6 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.19 | புகைப்படங்கள் (5 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.20 | புகைப்படங்கள் (6 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.21 | 01.07.2011 செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.22 | 27.07.1999 செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.23 | புகைப்படங்கள் மற்றும் | நகல் |
| | ஜெராக்ஸ் ரசீது | அசல் |
| ம.சா.ஆ.24 | குறுந்தகடு | அசல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 01.06.1954 கைலாசமூப்பன் மற்றும் அருணாசல மூப்பன் ஆகியோருக்கு பெருமாள்கவுண்டர் எழுதிக்கொடுத்த கிரயபத்திரம் | சான்றிட்டநகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.2 | அ.வ.எண்.182/2018 ன் வழக்குரை | அலுவலகநகல் |
| எ.ம.சா.ஆ.3 | 20.09.2018 அ.வ.எண்.224/2018 ன் வழக்குரை | அலுவலகநகல் |
| எ.ம.சா.ஆ.4 | அ.வ.எண்.224/2018 ன் எதிர்வழக்குரை | அலுவலகநகல் |
| எ.ம.சா.ஆ.5 | 30.01.2019 3 ம்மனுதாரர் அளித்த புகார் மனு | அலுவலகநகல் |
| எ.ம.சா.ஆ.6 | புகைப்படங்கள் (5 எண்ணிக்கை), குறுந்தகடு | அசல் |
| எ.ம.சா.ஆ.7 | 18.02.2020 குறிப்பாணை | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.8 | 27.01.2016 பட்டா மாறுதல் உத்தரவு | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.9 | 05.02.2020 சிட்டா | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.10 | 05.02.2020 கணிணி பட்டா | கணிணிநகல் |
| எ.ம.சா.ஆ.11 | 05.02.2020 அ பதிவேடு | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.12 | 05.02.2020 அடங்கல் | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.13 | 01.01.1962 குத்தகைப்பத்திரம் | அசல் |
| எ.ம.சா.ஆ.14 | 07.12.2006 காவேரி பெயரிலுள்ள கிரயப்பத்திரம் | சான்றிட்டநகல் |

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.